**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 70 /2022**

**Deposition of P.W.** 8

Name : டாக்டர். திரு. பொன்சங்கர்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 03.09.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை ராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம் அரசு மருத்துவமனையில் நுண்கதிரியியல் பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றிய போது 23.10.2021ம் தேதி ஆஸ்பின் (27) என்பவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரது மார்பகத்திற்கும், வயிற்றிற்கும் இரண்டு தோள்பட்டைக்கும் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அவற்றில் எவ்வித எலும்பு முறிவும் இல்லை. பின்னர் அவருக்கு சி.டி.ஸ்கேன் வயிற்றிற்கும், மார்பகத்திற்கும் எடுக்கப்பட்டது. அதில் அவரது மண்ணீரலில் அதிக படியான காயம் (கிரேடு 4) ஏற்பட்டிருந்தது. மற்றும் வயிற்றில் அதிகபடியான ரத்தப்போக்கு காணப்பட்டது. நுரையீரலில் பாதிப்பு எதுவும் இல்லை. அவருக்கு

உடனடியாக அறிக்கை வழங்கப்பட்டு மேல்சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டவருக்கு கல்லீரலில் காயம் இல்லை. ஒருவர் கீழே விழும் போது மண்ணீரலில் காயம் ஏற்பட வாய்ப்புண்டு. விலா எலும்பு உடைந்து குத்தியிருந்தால் ஏற்பட வாய்ப்புண்டு. நான் ஆஸ்பின் என்பவருக்கு தான் சிகிச்சை வழங்கினேன். விஜிஸ் என்பவருக்கு சிகிச்சை வழங்கவில்லை. ஆஸ்பின் என்பவரை தான் மேல்சிகிச்சைக்கு அனுப்பினார்கள். விழும் தன்மையை பொறுத்து எலும்பு குத்தாமலும் மண்ணீரலில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் விசாரிக்கும் போது முழுமையான சிகிட்சை விபரங்களை கூறவில்லை.

Name : திரு. ராஜேந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:03.09.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருவட்டார் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் 23.10.2021ம் தேதி காலை 07.30 மணிக்கு குலசேகரம் காவல்நிலையத்தில் பொதுநாட் குறிப்பு அலுவல் பணியில் இருந்த போது குலசேகரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவ்ல படி அங்கு சென்று சிகிச்சையிலிருந்த ஆஸ்பின் என்பவரை விசாரித்து புகார் மனு பெற்று 08.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய மனு எண்.471/21 ஆக பதிவு செய்து மேல் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் திரு. வினிஷ்பாபு அவர்கள் விசாரணைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொல்வது போல் எவ்வித புகார் மனுவும் பெறவில்லை என்றும்,



ரசீது எதுவும் வழங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புகார்மனு ரசீது கொடுத்திருந்தால் எழுத்து பூர்வமாக புகார் கொடுப்பவருக்கு தான்

ரசீது கொடுப்போம். இவ்வழக்கிலும் எழுத்துபூர்வமான புகார்மனு காயம்பட்ட நபர் கொடுத்தார்.  புகாரில் புலன் கொள்ளத்தக்க குற்றம் நடந்ததாக தெரிய வந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வோம், இல்லை என்றால் முதல் விசாரணைக்காக வேறு அதிகாரியிடம் ஒப்படைத்து விடுவோம். மனு ரசீது நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ரசீது கொடுக்கும் போது பெற்ற புகார் மனுவை மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.